17th March 1965]

கனம் திரு. வெ. ராமைய்யா : சட்டப்படி பெட்டர்மெண்ட் லெவியை நிர்ணயம் செய்வது கஷ்டமாக இருந்தது. அதைக் கொஞ்சம் நடை முறையில் சாத்தியப்படக்கூடிய முறையில் திருத்தம் செய்யவேண்டுமென்ற அடிப்படையில் திருத்தம் செய்தோம். அந்த அடிப்படையில் பெட்டர் மெண்ட் லெவி போட்டு வசூலிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ரெவின்யூ போர்டும் கீழ் இருக்கும் அதிகாரிகளும் எடுத்துக் கொண் டிருக்கிறார்கள்.

வட ஆற்காடு மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்குக் கட்டடங்கள்

* 261 கேள்வி.—**திரு. சி. கோதண்டராம பாகவதர் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு ஜில்லா கலெக்டர் அலுவலகம் மிகவும் பழைய கட்டடமாக இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்கும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) ஆம்.

(இ) அதைப் புதுப்பிக்கும் உத்தேசம் இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : அந்தக் கட்டடம் பழைய கட்டடம் மட்டு மல்ல, இடம் போதாத நிலைமையும் இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, அந்தக் கட்டடத்தைப் புதிதாகக் கட்டிக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்தக் கட்டடத்தை வேறு இடத்தில் அமைப்பதாக உத்தேசமில்லை. ஆனால் அங்கே இடநெருக்கடி இருப்பதை அரசாங்கம் உணர்ந்து அதைக் கொஞ்சம் விஸ்தரிக்கவேண்டுமென்ற முறையில் எஸ்டிமேட் சாங்ஷன் செய்தார்கள். ஆனால் தேசீய நெருக்கடி வந்த பிறகு அதுவும் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்துடன் வேறு தாலூகா இணைப்பு

* 262 கேள்வி,—**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நான்குனேரி தாலூகா வையாவது இராமநாதபுரம் சப்-தாலூகாவையாவது கன்னியாகுமரி மாவட்டத்துடன் சேர்க்க உத்தேசமுண்டா ?

(இ) ஆம் என்றால், காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) இல்லை.

(இ) வினு எழாது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTION *RE.* ACQUIREMENT OF BUILDINGS IN THE MANDAPAM CAMP.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, தற்போது சிலோன் சர்க்கார் வசம் இருக்கிற மண்டபம் காம்ப் கட்டடத்தை அவர்கள் விற்றுவிட முயற்சிக்கிறார்கள். அதை வாங்க இந்திய சர்க்கார் முயற்சி எடுத்து பேச்சு வார்த்தைகள் நடத்தியது. அவர்கள் கேட்கிற 20 லட்சம் ரூபாயைக் கொடுப்பதற்கில்லையென்றும், ஏற்கனவே அந்த இடத்தை பற்றிய ஜெண்டில்மேன் அக்ரீமெண்ட் படி திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்கிறார்கள். அவர்கள் தர மறுக்கிறார்கள். ஆகவே, அந்தப் பேச்சு

வார்த்தை முடிந்து விட்டது. இது மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்டது என்றாலும் இடம் நம்முடைய ராஜ்யத்தில் இருப்பதால், அந்த இடம் நமக்குப் பிரயோசனமாக இருக்கும் என்ற வகையில் அதைப் பெறுவதற்கு முயற்சி எடுக்கவேண்டும். ஆகவே, அதைப் பற்றி விவாதிப்பதற்குச் சபையை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்சனை ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு முற்றிலும் உரியதல்ல. மண்டபத்தில் இருக்கக்கூடிய கட்டடங்கள் சிலோன் அரசாங்கச் சொத்து. "மைக்ரேஷன் டெப்போ" ஆக இருந்தது. அதை விற்க முற்பட்டார்கள். யாருக்கு வேண்டுமானாலும் விற்கலாம். இந்த மாநில அரசாங்கம் அதை வாங்க வேண்டுமென்ற அளவில் ஒரு விலை மதிப்பு போட்டது. அவர்கள் ஒரு விலை சொன்னார்கள். நாம் ஒரு விலையைச் சொன்னோம். அது இன்னும் பேச்சு வார்த்தையில்தான் இருக்கிறது. இன்றைக்குப் பத்திரிகையில் வந்த செய்தியைப் பற்றி எனக்குத் தெரியாது. நமக்குத் தெரியாமலே ஏதேதோ செய்திகள் பத்திரிகைகளில் வருகின்றன. மேற்கொண்டு பேசி அவர்கள் சொல்கிற விலை பிடித்தமாக இருந்தால் வாங்கப்படும். பேச்சு வார்த்தை முறிந்து போய்விட்டது என்று சொல்வதற்கு இடம் இல்லை.

MR. SPEAKER : This does not come under an adjournment motion.

III.—CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

"That Demand Nos. V—Registration Department.
XI—Jails
XVII—Fisheries.
XIV —Stationery and Printing.

scheduled to be taken up on Tuesday, the 23rd March 1965, be taken up on Saturday, the 27th March 1965 and that Demand Nos.

I—Land Revenue Department
IV—Stamps Administration
XXXI—Famine Relief
XXXVII—Compensation to Zamindars

scheduled to be taken up on Saturday, the 27th March 1965, be taken up on Tuesday, the 23rd March 1965".

The motion was put and carried.

IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1965-66—*cont.*

(1) DEMAND NO. XX—INDUSTRIES.

(2) DEMAND NO. XLI—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,29,95,800 under Demand No. XX—Industries".

திரு. எம். வி. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, சேலம் இரும்பாலைத் திட்டத்தை இந்த ஆண்டிலேயே ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கும்படி வற்புறுத்த என்பேரில் உள்ள வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்